Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 265

செவ்வாய்க்கிழமை
19 ஒகஸ்ட் 2025

ஆவணி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

**நாட்டு மக்கள் விரும்பினால் மறுகணமே விலகுவார் அநுர**

விரிவு பக்:- 02

பருத்தித்துறை நகரப் பாடசாலை ஒன்றில்

## புதிய மாணவர்கள் இணைப்பு காரணமின்றித் திடீர் இரத்து!

### 14 மாணவர்களின் நிலை நிர்க்கதி

யாழ்ப்பாணம், ஓக. 19
யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் உள்ள பிரபல கல்லூரியில், இடைநிலை வகுப்புகளில் நிலவும் மாணவர் வெற்றிடங்களை நிரப்புவதில் நிலவும் வெளிப்புறத் தலையீடு காரணமாக,

11



# ஹர்த்தால் மத்திமம்

## பெருமளவு இடங்களில் இயல்புநிலை

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 19**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியால் நேற்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்த பகுதிநேரக் கடையடைப்புக்கு, கணிசமான இடங்களில் போதிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. சில இடங்களில் மட்டுமே முழுமையான ஆதரவு வழங்கப்பட்டது.**

11

பருத்தித்துறை பாடசாலை விவகாரம்

## எவரும் பாதிக்கப்படாமல் உடன் நடவடிக்கை எடுக்குக!

### ஆளுநர் உத்தரவு



யாழ்ப்பாணம், ஓக. 19
யாழ்ப்பாணம், பருத்தித்துறைப் பகுதியில் உள்ள பிரபல கல்லூரியில், இடைநிலை வகுப்புகளில் நிலவும் மாணவர் வெற்றிடங்களை நிரப்புவதில் ஏற்பட்டுள்ள

11

வவுனியாவில்

## கடைகளைப் பூட்டுமாறு குழுவாக அச்சுறுத்தல்!

### சுமந்திரனுக்கு எதிராக வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

வவுனியா, ஓக. 19
தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலர் சுமந்திரன், ஹர்த்தாலைக் கடைப்பிடிக்குமாறு ஆட்களுடன் வந்து அச்சுறுத்தும் வகையில் செயற்படுகின்றார் என்று வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர்

11

## யாழில் ஹர்த்தால் தோல்வி! வெட்கப்படுகிறாராம் சுமந்திரன்



யாழ்ப்பாணம், ஓக. 19
யாழ்ப்பாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் ஹர்த்தால் வெற்றியளிக்கவில்லை. ஏனைய பகுதிகளில் மக்கள் பெரும் ஆதரவைத் தந்துள்ளனர் - இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

11

## கடையடைப்புக்கான அழைப்பு நியாயமற்றது என நிரூபணம்!

### இலங்கை சிவசேனை அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 19
இலங்கைத் தமிழரசுக் கட்சியால், கடையடைப்புக்கு விடுக்கப்பட்ட அழைப்பு நியாயமற்றது என மக்கள் நிரூபித்துள்ளனர் என்று இலங்கை சிவசேனை அறிக்கை வெளியிட்டுள்ளது.
இது தொடர்பில் சிவசேனை அமைப்பு விடுத்துள்ள ஊடக

11



## போதைமாத்திரைகளுடன் இளைஞரொருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 19
போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த நபரொருவர் யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

11

## திடீர் சுகவீனம் முதியவர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 19
காய்ச்சல் மற்றும் திடீர் சுகவீனம் காரணமாக முதியவர் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.
அளவெட்டி மத்தி, அளவெட்டியைச் சேர்ந்த

11

## கடலுக்குள் மயங்கிய முதியவர் துயரச்சாவு

யாழ்ப்பாணம், ஓக. 19
கடற்றொழிலுக்குச் சென்ற விடத்தில், கடலுக்குள் மயக்கமடைந்த முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
மயிலிட்டியைச் சேர்ந்த அரியகுட்டி ஹரிகரன் (வயது-64) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
கடலுக்குள் மயக்கமடைந்தவர் உடனடியாக மீட்கப்பட்டு, தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட

11

முச்சந்தி முரளி

**‘வர்த்தகர்களின்ர வயித்தில அடிச்சால் எப்பிடி ஹர்த்தால் வெல்லமுடியும்?’**

## கடலில் நீராடச்சென்ற இளைஞர் உயிரிழப்பு

### விபரீதமானது பிறந்தநாள் கொண்டாட்டம்

கிளிநொச்சி, ஓக. 19
தாளையடி கடலில் நீராடச் சென்ற இளைஞரொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். பளையை சேர்ந்த நந்தகுமார் ராஜன் (வயது-30) என்ற இளைஞரே இவ்வாறு

04

## வடக்கு மாகாணத்தில் மழைக்குச் சாத்தியம்!

யாழ்ப்பாணம், ஓக. 19
வங்காள விரிகுடாவில் புதிய காற்றமுத்தத் தாழ்வுநிலை உருவாகியுள்ளது. ஆதலால், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் சில தினங்களுக்கு மழைக்குச் சாத்தியம் உள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வங்காள விரிகுடாவில் இந்தியாவின் ஆந்திராவுக்கும், ஒடிசாவுக்கும் இடையில்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 18.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4167
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 24 41 49 69
விசேட எழுத்து T

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 18.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1234
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 26 29 37 59

**NLB ஜய**
திகதி 18.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0193
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 1 1 5 8

**மெகா பவர்**
திகதி 18.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2273
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 09
வெற்றி இலக்கங்கள் 02 25 28 54

**மஹஜன சம்பத**
திகதி 18.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5925
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 4 2 1 4 0 9

**தன நிதானய**
திகதி 18.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1955
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 09 60 65 74
விசேட எழுத்து W

**அத சம்பத**
திகதி 18.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0500
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 1 4 0 9

**சுப தவசக்**
திகதி 18.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0041
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 16 43 46 50

# நாட்டுமக்கள் விரும்பினால் மறுகணமே விலகுவார் அநுர

## அமைச்சர் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.19**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை பதவியில் இருந்து அகற்றுவதற்கு 'அநுர கோ ஹோம்' தேவையில்லை. போகுமாறு மக்கள் சொன்னால் மறுகணமே அவர் போய்விடுவார் என அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பொருளாதாரரீதியாக வீழ்ந்து கிடந்த, ஊழல் மோசடிகள் நிரம்பிக் கிடந்த நாட்டை நாம் பாரமேற்றோம். இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அதிகம் உழைக்க வேண்டியுள்ளது. அதைச்செய்து வருகிறோம். அடுத்த தலைமுறை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் வாழக்கூடிய நாட்டை மக்களிடம் கையளிப்போம் என்று வாக்குறுதி வழங்கியுள்ளோம். அதை நிறைவேற்றுவோம். எமது செயற்பாட்டைத் தாங்கிக்கொள்ளமுடியாத எதிர்க்கட்சிகள் என்றுமில்லாதவாறு அதிகளவில் எமக்கு எதிராக போலிப் பரப்புரைகளைச் செய்கின்றன.

எமது கட்சிக்குள் பிளவு உள்ளது என்றும், சர்வதேச நாடுகளிடம் அடிபணிந்துவிட்டோம் என்றும், பொருளாதார அறிவு இல்லை, சர்வதேச உறவு பலவீனம், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் பல்வேறு வகையான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

அதுமட்டுமல்ல ஜனாதிபதி அநுர குமாரவை பதவியில் இருந்து விரட்டுவதற்கு 'அநுர கோ ஹோம்' உருவாகவுள்ளது என்றும் கூறி வருகின்றனர்-என்றார். (எ-25,75)

**சுபிரி தன சம்பத**
திகதி 18.08.2025
தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0633
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம் 0 6 6 2 9 8

**Super Ball** DLB
திகதி 18.08.2025
தினம் திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2899
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கம் 22 41 46 76

**சனிதா** DLB
திகதி 18.08.2025
தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம் 20 13 15 48
வெற்றி வாரம் 5060

**லக்ன ராசி**
திகதி 18.08.2025
தினம் திங்கட்கிழமை
கடகம்
வெற்றி இலக்கம் 02 04 39 51
சீட்டிழுப்பு வாரம் 4611

**KAPRUKA** DLB
திகதி 18.08.2025
தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து U
சுப்பர் இலக்கம் 19
வெற்றி இலக்கம் 43 48 50 55
வெற்றி வாரம் 2075

**அத கோடிபதி** DLB
திகதி 18.08.2025
தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கம் 11 15 16 65
வெற்றி வாரம் 2725

**JAYODA** DLB
திகதி 18.08.2025
தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கம் 06 11 31 44
வெற்றி வாரம் 2153

# எம்.பி.க்களின் ஓய்வூதியம் இரத்து; மறுபரிசீலனை செய்யவேண்டும்

கொழும்பு, ஓக.19

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களின் ஓய்வூதியத்தைக் குறைக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று ஓய்வுபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது-

சுமார் 490 நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களும், உயிரிழந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனைவிகளும் ஓய்வூதியப் பலனைப் பெறுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் ஓய்வூதியத்திலேயே வாழ்க்கையை நடத்துகின்றனர். சில நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஓய்வூதியத்திலேயே உணவு, மருந்து என்பவற்றைப் பெறுகின்றனர்.

மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் திருடர்கள் அல்லது மோசடி செய்பவர்கள் அல்லர் என்பதால், கடினமாக வாழ்க்கையை வாழ்வோர் கருணையுடன் நடத்தப்படவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் நடைமுறை இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பா போன்ற நாடுகளில் உள்ள நடைமுறையே.

இது தொடர்பாக இறுதிமுடிவை எடுப்பதற்கு முன்னர் அரசாங்கம் அவர்களின் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்தவேண்டும்- என்றார். (எ-இ)

# அடுத்த ஆண்டில் நிச்சயம் தேர்தல்

## பிமல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.19

அடுத்த வருடம் முதல் ஆறு மாதங்களுக்குள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2025ஆம் ஆண்டில் நாம் தேர்தல் நடத்தினோம். 2026ஆம் ஆண்டு முதல் ஆறு மாதங்களுக்குள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும். சட்டரீதியாக உள்ள தடைகள் நீக்கப்படும்.

மாகாணசபைத் தேர்தலை நடத்திய பின்னர், புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய நடவடிக்கை ஆரம்பமாகும். புதிய அரசமைப்பை இயற்றும் பணியென்பது பரந்தப்பட்ட விடயமாகும்-என்றார். (எ-44)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை அச்சத்தால் தவிர்க்கும் அரசாங்கம்!

## குற்றஞ்சாட்டுகின்றார் முஜ்புர் ரஹ்மான்



கொழும்பு, ஓக.19

பாதுகாப்புப் பிரதியமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம்மீதான விவாதத்தின்போது பல உண்மைகள் வெளிப்படும் என்ற அச்சத்தாலேயே அரசாங்கம் அதைத் தவிர்க்க முயற்சிக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜ்புர் ரஹ்மான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவும், அதை எதிர்கொள்ளவும் அரசாங்கத்துக்கு பலம் இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முற்றிலும் தவிர்ப்பதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில், ஐக்கிய மக்கள் சக்தியும் அதற்கான உரிய பதில் நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (எ-இ)



# இந்திய உளவுப்பிரிவில் பயின்ற எம்.பி.க்களும் நாடாளுமன்றில்!

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு

கடந்த காலங்களில் இந்திய உளவுப் பிரிவால் பயிற்சி வழங்கப்பட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போதும் நாடாளுமன்றில் உள்ளனர் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாம் ஆட்சிக்கு வந்ததன் பின் நாட்டில் நிலையான இன உறவை உருவாக்கியுள்ளோம். தமிழர்களும், முஸ்லிம்களும், சிங்களவர்களும் இந்த நாட்டு மக்கள். இந்த நாடு அனைவருக்கும் சொந்தம் என்ற உண்மையை நிரூபித்துள்ளோம்.

வரலாற்றில் முதற்தடவையாக ஒரு தேசியக் கட்சி வடக்குக் கிழக்கில் வெற்றிபெற்றுள்ளது. தமிழ் முஸ்லிம் மக்களை அதிகம் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளைத் தோற்கடித்து வெற்றிபெற்றுள்ளோம். வடக்குக் கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையே அதற்குக் காரணம். இனி ஒருபோதும் இனவாதத்தை தலைதூக்க விடமாட்டோம். இருந்தும் வடக்குக் கிழக்கில் உள்ள சில அரசியல்வாதிகள் இன்னும் இனவாதத்தை வைத்தே அரசியல் செய்கின்றனர். அவர்களுக்கு அதைத்தவிர வேறு வழி தெரியாது. கடந்த காலங்களில் இந்திய உளவுப் பிரிவால் பயிற்சி வழங்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட இப்போது நாடாளுமன்றில் உள்ளார்கள். ஆனால் எவராலும் எதுவும் செய்யமுடியாது. எமது நல்லிணக்க வேலைத் திட்டத்தை உடைக்கமுடியாது-என்றார். (எ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


படங்கள் ஐ.சிவசாந்தன்




# சொற்பொழிவு


யாழ்ப்பாணம், ஓக.19
சைவ வாழ்வியலில் திருவிளையாடற் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கைதடி நாவற்குழி தெற்கு அருள்மிகு பெரும் படை அம்மன் ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்தத் திருவிளையாடற் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க.கயிலைவாசனின் "யானை செய்த படலம்" எனும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-41)

யாழ்ப்பாணம், ஓக.19
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடரின் 35ஆவது சொற்பொழிவு சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்த குரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமி நாதக்குருக்கள் ஆசியுரையையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும், சைவப்புலவர், பிரசங்க பூஷணம் கந்த. சத்தியதாசன் "ச அண்டகோசப் படலம்" எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவையும் நிகழ்த்தவுள்ளனர். சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் கைலாசவாகன உற்சவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது. வசந்தமண்டபப் பூசை வழிபாடுகள், கொடித்தம்பப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து உள்வீதி உலா இடம்பெற்றது.
தொடர்ந்து மாலை 6 மணியளவில் வள்ளி தெய்வயானை சமேதராக நல்லூர்க் கந்தவேற்பெருமான் கைலாச வாகனத்தில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (எ-41-66)

# தெய்வீகக்கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.19
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகக்கலை அர்ச்சனை நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இதன்போது மட்டுவிலூர் சகோதரிகள் நுண்கலைமாணி திருமதி சங்கீதா ரவிசங்கர், திருமதி ஆரணி பாலச்சந்திரன் ஆகியோரின் முருகநாம பஜனை நிகழ்வும், பவனுஜா பவானந்தசர்மா வழங்கும் நடனசமர்ப்பண நிகழ்வும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் கஜவல்லி மஹாவல்லி உற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 6.45 மணிக்கு நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக நடைபெற்றது. (எ-25,66)


படம்: ஐ.சிவசாந்தன்

# நல்லூரான் ஆலயத்தில் ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.19
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு, சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் ஆன்மிக அருளுரை இன்று செவ்வாய்க்கிழமை இருபத்திரெண்டாவது நாளாக நடைபெறவுள்ளது. நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இன்று இரவு 8 மணி முதல் 8.30 மணி வரை இடம்பெறவுள்ள நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் "முருகா நினது அருளால்..." எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை ஆற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25/66)

# 22 ஆம் திருவிழா





## நல்லூரான் சிறப்பம்சம்

### கந்தன் தேரேறி வருகிறான்

நல்லை நகர் வீதியில்
கந்தன் தேரேறி வருகிறான்
நலங்கள் பல அருளிட
தேரேறி வருகிறான்

அல்லல் தீர்த்து எமைக்காக்க
தேரேறி வருகிறான்
அடியவருக்கு அபயமளிக்க
தேரேறி வருகிறான்

என்றும் அமைதி நிலவவைக்க
தேரேறி வருகிறான்
இல்லை இனித் துன்பம் என்றே
தேரேறி வருகிறான்

நல்லதொரு தீர்வைத்தர
தேரேறி வருகிறான்
நல்லை நகர் வீதியில் கந்தன்
தேரேறி வருகிறான்

திருமதி செல்வராணி பாக்கியநாதன்
வட்டுக்கோட்டை

### மகிழ்வாக வாழ அருள் தந்திடுவாய்

தேரிலேறி வரும் நல்லூரானே
எம் குறைகளைக் கவனமாய்க் கேட்டிடுவாய்
செம்மணிப் புதைகுழியின் கொடுமைகளை
நீரொரு கணம் நினைத்துப் பாருமப்பா
போதைப்பொருள் பாவனையால் வன்முறைகள்
கண்ணீர்க் கதைகளாவதையும் பார்த்திடுவாய்
இப்படியே தொடரும் வேதனைகளை அகற்றி
மகிழ்வாக வாழ அருள் தந்திடுவாய்

கலாபூஷணம் இ.காசிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலுள்ள இராணுவ முகாம்களுக்கு எதிராக போராடுவோரை கைதுசெய்க

## வலியுறுத்துகின்றார் அக்மீமன தயாரத்ன தேரர்

கொழும்பு, ஓக.19

வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களை அரசாங்கம் அகற்றக்கூடாது. அவற்றை அகற்றக்கோரி போராடுபவர்களைக் கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார் லங்கா மக்கள் என்ற கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான அக்மீமன தயாரத்ன தேரர். இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு, கிழக்கில் 30 வருடகால போர் நிலவியது. உயிர் தியாகம் செய்தே படையினர் தாய்நாட்டை பாதுகாத்தனர். இப்போது வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறுகோரி போராட்டம் நடைபெறுகின்றது. புலிகள் மற்றும் டயஸ்போராக்களுடன் தொடர்புபட்டவர்களே இவ்வாறு வலியுறுத்துகின்றனர். இது பாரதூரமான தவறாகும். மக்களை குழப்பும் வகையில் செயற்படுதல், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் செயற்படுதல் என்பன தவறாகும். எனவே, இவர்களைக் கைது செய்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் ஏற்பாடு உள்ளது. ஹர்த்தால் தொடர்பில் அரசாங்கம் மௌனம் காக்கின்றது. வடக்கு, கிழக்கில் இருந்து எப்படி இராணுவ முகாம்களை அகற்றமுடியும்? முகாம்கள் அகற்றப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள காணிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. டயஸ்போரா மற்றும் பயங்கரவாதிகளின் கோரிக்கைக்கு அமைய இனவாதத்தை தூண்டும் வகையிலேயே இப்படியான விடயங்கள் இடம்பெறுகின்றன. இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோருபவர்களைக் கைது செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (எ-44)


**யாழ் வணிகர் கழகம் / YARL VANEGAR KALAGAM**
**(கம்பனிச் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டது இல. GA 2601)**

2025 ஆம் ஆண்டிற்கான கம்பனிச்சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட யாழ் வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 20.09.2025 சனிக்கிழமை அன்று நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே யாழ் வணிகர் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தங்களது உறுப்புரிமையை உறுதிப்படுத்தி தவறாது கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**குறிப்பு** : பிரேரணைகள் ஏதும் இருப்பின் 20.09.2025 அன்று நடைபெறவுள்ள கூட்டத்திற்கு 15 நாட்களுக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**திகதி : 20.09.2025 சனிக்கிழமை**
**நேரம் : காலை 10.30 மணி**
**இடம் : யாழ் வணிகர் கழகப் பணிமனை**
**165, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**செயலாளர்**
**யாழ் வணிகர் கழகம்.**

2025 ஆம் ஆண்டிற்கான யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் (JAFFNA CHAMBER OF COMMERCE) வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 20.09.2025 அன்று நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே காலை 11.45 மணிக்கு இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ் வணிகர் கழக பணிமனையில் கழக அங்கத்தவர்களை ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**செயலாளர்**
**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.**


## நூல்கள் அன்பளிப்பு



*யாழ்ப்பாணம், ஓக.19*

*யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்மொழித் தலைவரும், தமிழக எழுத்தாளருமான பேராசிரியர் அரங்க இராமலிங்கம் கடந்த செவ்வாய்க் கிழமை இணுவில் பொதுநூலகத்துக்குச் சென்று ஒரு தொகுதி நூல்களை நூலகத் தலைவரிடம் கையளித்துள்ளார்.*

*அத்துடன் நூலகத்தின் செயற்பாடுகளைப் பார்வையிட்டதுடன் நூலகத்தின் தேவைகளையும் கேட்டறிந்து கொண்டார். (ச-25,66,27)*


## கடலில்...

உயிரிழந்துள்ளார். சோரன்பற்று பகுதியை சேர்ந்த ஒன்பது இளைஞர்கள் கொண்ட குழு பிறந்த நாள் கொண்டாட்டத்துக்காக உழவு இயந்திரத்தில் தாளையடி கடற்கரைக்கு சென்று குளித்துள்ளனர். இதன்போது மாலை 5.30 மணியளவில் கடலில் குத்துக்கரணம் (பல்டி) அடித்த குறித்த இளைஞர் மயக்கமுற்றுள்ளார் என்று கூறப்படுகின்றது. இதையடுத்து மயக்கமடைந்த அவர் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். சடலம் மீது, உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-100)


# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 12 . 1947

மறைவு 17 . 08 . 2025



**சுப்பிரமணியம் தேசிங்கராஜா**

வேலணையைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தேசிங்கராஜா அவர்கள் நேற்றுமுன்தினம் (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியரின் புத்திரனும், யோகேஸ்வரியின் (வேதம்) அன்புக் கணவரும், அன்னபூரணம், கனகம்மா, செல்வராணி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் விஜயராணி, கோணேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரபாகரன் (சுரேஷ்), சுதாகரன் (தெய்யா), யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மீனலோஜினி, ஸ்வர்னா (றமா), ஸ்ரீமோகன்ராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகராசா, மார்க்கண்டு, பாலசிங்கம், மனோன்மணி, இராசரத்தினம், புஸ்பலதா, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் தில்லைநாதர், இராஜேஸ்வரி (தேவி), சாந்தலிங்கம் காலஞ்சென்றவர்களான அரியநாயகம், கணேசதாசன் ஆகியோரின் மைத்துனரும் மிதுஷன், பிரியந்தன், யனுஜா, ஜனிகா, றமணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2025) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**9, 3ம் குறுக்குத்தெரு,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.** (CS/59164) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

மண்மகிழ 26 . 11 . 1940

கண்நெகிழ 16 . 08 . 2025



**திருமதி புஷ்பராணி கையிலாயநாதன்**

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஷ்பராணி கையிலாயநாதன் அவர்கள் 16.08.2025 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னார் அமரர் கையிலாயநாதன் MLT (இளைப்பாறிய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு மனைவியும், (காலஞ்சென்ற) ஏகாம்பரநாதன் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் மூளாய் (காலஞ்சென்ற) திரு. திருமதி இளையதம்பி அவர்களின் அருமை மருமகளும் ஆவார். அன்னார் (காலஞ்சென்ற) விவேகவதி, இராஜநாதன், (காலஞ்சென்ற) யோகராணி, பாஸ்கரதேவி, கனகசபாநாதன், ருக்குமணிதேவி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு சகோதரியும், (காலஞ்சென்ற) யோகரட்ணம், சரஸ்வதிதேவி (ராதா), (காலஞ்சென்ற) நடராஜா, (காலஞ்சென்ற) நரேந்திரன், வரலக்ஷ்மி, ஆறுமுகம் கணபதிப்பிள்ளை, (காலஞ்சென்ற) கிருஷ்ணராஜா, (காலஞ்சென்ற) சோமஸ்கந்தா மற்றும் தியாகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தெஹிவளை, களுபோவில ஜயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று 17.08.2025 அன்று கொஹுவளை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
பெறாமகன் மதன் - 0777701307


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதக்கொள்கலன்கள் விசாரணை அவசியம்!

## வலியுறுத்துகின்றது மொட்டுக் கட்சி

கொழும்பு, ஓக.19

**புலிகளின் ஆயுதங்கள் வந்தன என்று கூறப்படும் 323 கொள்கலன்கள் தொடர்பில் புதிய பொலிஸ்மா அதிபர் விசாரணைகளை மேற்கொண்டு, உண்மையைக் கண்டறியவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி வலியுறுத்தியுள்ளது.**

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக்கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளதாவது-

மத்திய வங்கி பிணைமுறி மோசடியைவிட கொள்கலன் மோசடி பாரதூரமானது. புலிகளின் ஆயுதங்கள் கொள்கலன்களில் வந்தன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபையில் கருத்து வெளியிட்டார். இந்தக் கொள்கலன்களில் ஆயுதங்கள் இருந்தனவா, போதைப் பொருள் இருந்ததா, நிதி இருந்ததா என்பது பற்றி எவருக்கும் தெரியாது. அது பற்றிய எவ்வித தகவலும் இல்லை.

323 கொள்கலன்கள் என்பது சாதாரண விடயம் அல்ல. அவற்றை வீதியில் நிறுத்திவைத்தால் 5 கிலோமீற்றர் தூரம் அளவுக்கு இருக்கும்.

புதிய பொலிஸ்மா அதிபர் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவாரானால், இந்தக் கொள்கலன் மோசடி தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும்.

இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரிய மோசடி இதுதான். நிதி அமைச்சு, துறைமுகங்கள் அமைச்சு என்பன இதனுடன் தொடர்புபட்டுள்ளன. எனவே, உரிய விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை நீதியின்முன் நிறுத்த வேண்டும்-என்றார். (எ-44)

# ரணவீரவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக.19

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவின் விளக்கமறியல் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கிரிபத்கொடப் பகுதியில் இடம்பெற்ற காணி மோசடிச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று மஹர நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விளக்கமறியலில் பிரசன்ன ரணவீர நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தநிலையில், நீதிவான் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார். (எ-இ)

# தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் இருபத்து மூன்றாம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.19

நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுத்துவரும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் இருபத்து மூன்றாம் நாள் நிகழ்வு, நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நாளை புதன் கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாதபீட 8 ஆவது குருபீடாதிபதி வணக்கத்துக்குரிய ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, சுழிபுரம், சிவசுப்பிரமணிய ஆலயப் பிரதமகுரு சிவாகம கலாநிதி சிவஸ்ரீ ந.பிரசாந்தக் குருக்கள் தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவின் கோண்டாவில் கைலாசநாத வேத சிவாகம அறநெறிப்பாடசாலை மற்றும் நெட்டிலிப்பாய் ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் கலைநிகழ்வுகளை வழங்கவுள்ளனர். அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கச் செயலாளர், சைவப்புலவர் செ.த.குமரன் 'அருணகிரிநாதரும் திருப்புகழும்' என்ற தொனிப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். கொழும்பு, இசை அர்ச்சனை அக்கடமி வாசுகி சுவாமிநாதன் சர்மா மற்றும் நந்தினி சுவாமி நாதன் சர்மா ஆகியோரின் வயலின் இசை நிகழ்வும் மற்றும் மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெறவுள்ளன. (எ-25)



# சட்டவிரோத சொத்துச் சேர்த்த பொலிஸார் மீதும் நடவடிக்கை

கொழும்பு, ஓக.19

சட்டவிரோதமாக சொத்துகளை ஈட்டும் பொலிஸ் அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடகசந்திப்பில்பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

82 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகளில், மிகக் குறைந்த எண்ணிக்கையிலானோர் ஊழல், சட்டவிரோத மற்றும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். எந்தவொரு அதிகாரியின் இதுபோன்ற செயல்களுக்கு இடமளிக்கமுடியாது. ஊழல் மற்றும் இலஞ்சம் வாங்கும் பொலிஸ் அதிகாரிகளை தொடர்ந்து கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து பொலிஸ் அதிகாரிகளும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அனைத்துப் பணியாளர் தர அதிகாரிகளும் வருடத்துக்கு ஒருமுறை தங்கள் சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளைச் சமர்ப்பிக்கவேண்டும்-என்றார். (எ-இ)

# வீதியில் மீட்கப்பட்ட துப்பாக்கிகள்

கடுவெல, கொரதொட, துன்ஹதஹேனப் பகுதியில் வீதி ஒன்றில் இருந்து மூன்று ரி-56 ரகத் துப்பாக்கிகள் மற்றும் 5 கைத்துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வீதியில் கிடந்த பொதி ஒன்றைச் சோதனையிட்டபோது இந்தத் துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட துப்பாக்கிகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை நவகமுவ பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (எ-இ)



புதினம் தெரியுமோ?

## நித்திரைப் பாயோட...!

உலக்கை தேய்ஞ்சு உளிப்பிடியானமாதிரிப் போட்டுது வீட்டுக்கட்சியின்ர சட்டாம்பியார் நடத்தின ஹர்த்தால் கதை. முதல் கோணல் முற்றும் கோணல் எண்டமாதிரி, ஹர்த்தால் பற்றின அறிவிப்பே சறுக்கிப் போட்டுது. 'தனக்கு காத்து ஏத்தோணும் எண்டால் இப்பிடி ஏதும் செய்யோணும்' எண்டு சட்டாம்பியார் நினைச்சுத்தான், முத்துஐயன்கட்டில உண்மையா என்ன நடந்ததெண்டே தெரியாமல், மேலோட்டமா செய்தியை அறிஞ்சதும் 'போடடா ஹர்த்தாலை' எண்டு நாட்டாமைக் கணக்கில அறிவிச்சிட்டார். ஆனால் அதுக்குப் பிறகு எல்லாப் பக்கத்தாலையும் எதிர்ப்பு எக்கச்சக்கமா வரத்தொடங்க, ஆளுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. மடுத் திருவிழா எண்டு ஆயர்மார் ஒருபக்கமும், நல்லூர்த் திருவிழா எண்டு சைவச்சனம் இன்னொரு பக்கமும் ஆய்க்கினை குடுத்தாலும், தான் பிடிச்ச முயலுக்கு மூண்டு கால் எண்டுதான் சட்டாம்பியார் விடாப்பிடியா நிண்டவர். ஆனால் 'அண்டைக்கு எங்கட சுதந்திர தினம். அந்த நாளில கடையளை அடைச்சால் அது எங்களுக்கு எதிராச் செய்தமாதிரிப் போடும், அதால நாளை மாத்துங்கோ' எண்டு ஒரு தரப்பு சட்டாம்பியாரின்ர கொலரைப் பிடிச்சு உலுப்ப, ஆள் பட்டெண்டு 'மாதாவுக்காக ஓகஸ்ட் 15ஆம் திகதி எண்டிருந்த ஹர்த்தாலை ஓகஸ்ட் 18க்கு மாத்துறம்' எண்டு அறிவிச்சார். அவர் சொன்ன மாதிரி மாதாவுக்காகத்தான் ஹர்த்தால் திகதி மாத்துப்பட்டது, ஆனால் அது மடுமாதாவுக்காண்டி இல்லை, பாரதமாதாவுக்காக எண்டதும் எல்லாருக்கும் நல்லாவே தெரியும்.

அதுக்குப் பிறகாவது எதிர்ப்புக் குறையும் எண்டு சட்டாம்பியார் நினைச்சிருப்பார். ஆனால் உந்த சமூகவலைத் தளங்களில ஹர்த்தாலை எல்லாரும் வறுத்தெடுக்கத் தொடங்கிட்டினம். அந்தத் துணிச்சலில ஹர்த்தாலுக்கு எதிரா ஒவ்வொரு அமைப்பா அறிக்கையளும் வரத்தொடங்கிட்டுது. இப்பிடியே விட்டால் கட்சியை விட்டே அடிச்சுத் துரத்திப்போடுவாங்கள் எண்ட பயத்திலதானே களத்தில இறங்கி ஒவ்வொரு வர்த்தகர் சங்கத்திட்டையும் சட்டாம்பியார் கெஞ்சிப் பார்த்தார். அது சரிவரேலை எண்டவுடன, தன்ர சொல்லுக்கேட்டு ஆடுற செம்புகளை இறக்கியும் கேட்டுப்பார்த்தார். அதுக்கும் ஒருத்தரும் மசியேலை. அதால எப்பிடியும் ஹர்த்தால் காலைவாரும் எண்டு ஆளுக்கு விளங்கிட்டுது. அதால அப்பிடியே திரும்பவும் 'றிவேர்ஸ் கியர்' அடிச்சு 'ஹர்த்தால் நடக்கும், ஆனால் காலமையோட முடிப்பம்' எண்டொரு 'குபீர்' அறிவிப்பைச் செய்தார். இந்த அறிவிப்போட உலகத்திலேயே முதல் முறையா இப்பிடி 'பாட் ரைம்' ஹர்த்தால் நடத்தின ஆளா சட்டாம்பியார் சரித்திரத்தில இடம்பிடிச்சிட்டார்.

ஏனெண்டால் கடையடைப்பு எண்டது ஒரு மணித்தியாலம் நடக்கிற போராட்டம் இல்லை. ஹர்த்தால் நடந்தால் அந்த ஏரியாவே அண்டைக்கு முழுக்க செயலிழந்து போனால்தான் அதின்ர வீரியம் சம்பந்தப்பட்ட தரப்புக்கு உறைச்சு, கொஞ்சமெண்டாலும் நடவடிக்கை எடுப்பினம். ஆனால் நித்திரைப் பாயால எழும்ப முதலே ஹர்த்தால் நடந்து முடிஞ்சுதெண்டால், அந்தக் ஹர்த்தால் நடந்தாலும் ஒண்டுதான், நடக்காட்டியும் ஒண்டுதானே. முன்னப் பின்ன சனத்துக்காக போராடி இருந்தாலோ, இல்லாட்டி இப்பிடிப் போராட்டங்களை நடத்தியிருந்தாலோதானே அவருக்கும் உதுகளைப் பற்றித் தெரிஞ்சிருக்கும். பாவம், இவ்வளவு நாளும் ஆமிக்காரரின்ர பாதுகாப்புக்க அடைகாத்துப் போட்டு, இப்ப அதே ஆமியைக் கலைக்கப் போராட்டம் வைக்கச்சொன்னால் அந்தாள் என்னதான் செய்யும்? அரசியலுக்காக அந்தாள் எவ்வளவு அவமானப்பட வேண்டியிருக்கு கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரதன தேரர், துசிதவுக்கு எதிராகப் பிடியாணை

கொழும்பு, ஓக.19

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அதுரலியே ரதன தேரருக்கு எதிராக நுகேகொட நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

அதேநேரம், தேசிய லொத்தர் சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகள் முன்வைத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, நீதிமன்றங்கள் இந்தப் பிடியாணை உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளன.

(ஏ-இ)

## 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18.02.1947

தோற்றம்
23.04.1970



மறைவு: 01.09.1994

காலமெல்லாம் காத்த கரங்களை தேடியபடி
ஓடி முடித்ததே முப்பத்தொரு ஆண்டுகள்
அன்னையாக அரவணைக்க ஏழேழு பிறவிக்கும்
எம் அம்மா நீங்களே வரவேண்டும்
வானத்து நிலவாய் வையகத்தின் தென்றலாய்
உங்கள் குரல் ஒலிக்கும் என எண்ணியபடி
வாழ்கின்றோம் நாம் அனைவரும்
மண்ணிலும் இன்றி எமது இதயத்திலும் விண்ணிலும்
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

திருமதி
**நவரத்தினம் விசாலாட்சி**
(ரத்தினம்)

செல்வி
**நவரத்தினம் ஜெயசுதா**
(ரதி)

மீசாலை வடக்கு,
மீசாலை.

(CS 59147)

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### கருணாமூர்த்தி விஜயலக்ஷ்மி

கச்சேரி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், 29/5 புகையிரத நிலைய வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கருணாமூர்த்தி விஜயலக்ஷ்மி அவர்கள் நேற்று (18.08.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - புஸ்பராசமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கனகபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், கருணாமூர்த்தியின் அன்பு மனைவியும், தாட்சாயினி (கனடா), மதனராஜன் (K.M.Studio), நிந்துயா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகரட்ணம் (கனடா), ஜெயகாந்தன் (லண்டன்), கீர்த்தனா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஷாயினி, அபிநயா, துருவன், அத்தமி, தூரிகா, சுஜேன், இலக்கியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற ஜெயலக்சுமி மற்றும் ஜெயலிங்கம், சுகிர்தலக்சுமி, காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், புஸ்பலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மகுலசிங்கம், பாமா, ரவீந்திரன், ராஜீ, மகிழ்ராஜன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம்
14.01.1952

மறைவு
18.08.2025

29/5, புகையிரத நிலைய வீதி,
அரியாலை.

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS/59161) JK

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

உன்மீது உனக்கே நம்பிக்கை இல்லையென்றால் கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை
– விவேகானந்தர்–

# கருத்தில்லாமல் கடந்த ஹர்த்தால்

மிகப்பெரும் சர்ச்சைகளோடு, எதிர்பார்த்தபடியே பிசுபிசுத்துப் போயிருக்கிறது தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் அறிவித்த கடையடைப்புப் போராட்டம். பலரும் சுமந்திரன் என்ற தனிநபர்மீது தமிழ்மக்கள் கொண்டுள்ள வெறுப்பின் வெளிப்பாடாகவே, அவர் அறிவித்தார் என்ற ஒற்றைக்காரணத்துக்காகவே இந்தக் கடையடைப்பு எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை என்று கருதுகிறார்கள். அதிலும் உண்மை இருக்கத்தான் செய்கின்றது. இது நாள்வரையும் பெரும்பாலான மக்கள் போராட்டங்களில் நேரடியாகக் கலந்துகொள்ளாதவர்கள், திடீர் ஞானம் வந்தவர்களாக இப்படியான போராட்டங்களை அறிவிக்கும்போது, அதனை மக்கள் எப்படி முழுமனதோடு ஏற்றுக்கொள்வார்கள்? ஆனாலும் தனியே இந்தப் போராட்டத்தின் தோல்விக்கு தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் மீதான மக்களின் அதிருப்தி மட்டுமே காரணமல்ல. ஒரு போராட்டத்தை எப்படி மக்கள் மயப்படுத்துவது? எப்படி ஒழுங்கமைப்பது? என்பது தொடர்பான விடயங்களில் கோட்டைவிட்டதால்தான், இப்படியொரு நிலை.

மக்கள் போராட்டங்கள் என்பவை வலிந்து உருவாக்கப்படுபவை அல்ல. அவை தன்னெழுச்சியாக நிகழ்பவை. அப்படியான போராட்டங்களுக்கு அரணாக நின்று, அவற்றைச் செவ்வனே நடத்திமுடிக்க உதவுவதே கட்சிகளின் பணியாக இருக்கவேண்டும். மாறாக 'எங்கள் கட்சி போராட்டத்துக்கு அழைப்பை விடுத்துள்ளதால், கட்டாயம் நீங்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத்தான் வேண்டும்' என மிரட்டுவது போன்ற தொனியில் ஆதரவு கேட்பதென்பது ஒரு போதுமே வேலைக்காகாத காரியமே. ஒருவேளை, போராட்டங்களுக்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள மக்கள் தயங்குவார்கள் எனில், அந்தப் பணியைக் கட்சிகள் சுமக்கலாம். ஆனால் அதில் சுயநலம் துளியும் இருக்கக்கூடாது. 'இந்தப் போராட்டத்தை நடத்தினால் மக்களிடம் கட்சியின் செல்வாக்கு அதிகரிக்கும், எமக்கும் வாக்குவங்கி உயரும்' என்ற இலாபநட்டக் கணக்கோடு போராட்டங்களை ஒழுங்கமைத்தால் என்ன கதியென்பதை நேற்றைய ஹர்த்தால் காட்சிகள் தெளிவாகவே உணர்த்தியிருக்கின்றன.

'இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படவேண்டுமென்பதிலோ, படைத்தரப்பின் அட்டூழியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டுமென்பதிலோ எங்கள் எவருக்கும் மாறுபட்ட கருத்தில்லை. ஆனால் இந்தப் போராட்டத்தால் பாதிப்பை எதிர்கொள்ளும் தரப்புகளோடோ அல்லது போராட்டங்களை மக்கள் மயப்படுத்தும் அமைப்புகளோடோ கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக முடிவெடுத்து இந்தக் கடையடைப்புக்கு அழைப்புவிட்டிருக்கிறார்கள். குறைந்தபட்சம் சகல தமிழ்க்கட்சிகளுடன் இணைந்து அழைப்புவிட்டாலாவது ஆதரவு கொடுத்திருக்கலாம். ஆனால் ஒரு கட்சியின் ஒருசாரார் மாத்திரம் தங்கள் அரசியல் இலாபத்துக்காக அறிவித்த ஹர்த்தாலுக்கு ஏன் ஆதரவு கொடுக்கவேண்டும்?' என்பதே பெரும்பாலானோரின் அபிப்பிராயமாக இருந்தது. அதனாலேயே யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வர்த்தக சங்கங்கள், ஊடகங்கள் என்பன இந்தக் கடையடைப்புக்குத் தமது ஒத்துழைப்பை முழுமையாக நல்கவில்லை. இதுவரைக்கும் எந்தவொரு மக்கள் போராட்டமும் சந்திக்காத எதிர்ப்பை, தமிழ் மக்களிடையே சம்பாதித்ததைத்தவிர வேறெதனையும் இந்தக் ஹர்த்தால் சாதித்துவிடவில்லை என்பதே உண்மை.




# இலாபகரமான பாதையில் நுழைந்தது மின்சாரசபை

கொழும்பு, ஓக.19

**2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டின் காலாண்டில் இலங்கை மின்சாரசபை 5.31 பில்லியன் ரூபா இலாபத்தைப் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

முந்தைய காலாண்டில், அதாவது இந்த ஆண்டின் மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டின் காலாண்டில், 18.47 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருந்த நிலையில், இந்த காலாண்டில் மின்சாரசபை இலாபமீட்டியுள்ளது. 2025 ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட மின்சாரக் கட்டண திருத்தத்தின்மூலமே மின்சாரசபை இலாபகரமான பாதையில் நுழைய முடிந்துள்ளது என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஆயினும் 2024ஆம் ஆண்டு ஜூன் காலாண்டில் சபையால் ஈட்டப்பட்ட 34.53 பில்லியன் ரூபா இலாபத்துடன் ஒப்பிடும்போது, 2025ஆம் ஆண்டு ஜூன் காலாண்டில் ஈட்டப்பட்ட இலாபம் 85 வீதக் குறைவைக் காட்டுகிறது. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்குவந்த பின்னர் மின்சாரக் கட்டணம் சுமார் 20 வீதம் குறைக்கப்பட்டமையே 2025ஆம் ஆண்டு மார்ச் மாதக் காலாண்டில் ஏற்பட்ட இழப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## ஹர்த்தால் நல்லதல்ல

கொழும்பு, ஓக. 19

வடக்கில் இடம்பெற்ற ஹர்த்தால் நாட்டுக்கு நல்லதல்ல என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் பிரிவினைவாத போரே நிலவியது. அதை முடிவுக்குக் கொண்டு வந்து வடக்கிலும், தெற்கிலும் மஹிந்த ராஜபக்சவே அமைதியை நிலைநாட்டினார். எனினும், வடக்கு மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக இனவாதத்தை பரப்பி, இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் என ஜே.வி.பி. வலியுறுத்தியது. அன்று ஜே.வி.பி. விதைத்த விதைகளுக்குரிய விளைச்சல் இன்று கிடைக்கின்றது' - என்றார். (ம-44)

## தடம்புரண்ட ரயிலால் சேவைகள் தாமதம்

கொழும்பு, ஓக.19

கொழும்பு, கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களுக்கு இடையே நேற்று ரயில் ஒன்று தடம்புரண்டுள்ளது. காலியில் இருந்து மருதானை நோக்கிப் பயணித்த ரயிலே தடம் புரண்டுள்ளது. இதனால் பிரதான மார்க்கம் மற்றும் கடலோரப் மார்க்கத்தில் செல்லும் ரயில்கள் தாமதமாக இயக்கப்பட்டன என்று ரயில்வேத் திணைக்களம் தெரிவித்தது. நேற்று பிற்பகலில் நிலைமை வழமைக்குத் திரும்பியது என்றும் ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## ரஜமஹா விகாரை விகாராதிபதி வாக்குமூலம்

மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குனவெவே தம்மரதன தேரர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றுத் திங்கட்கிழமை காலை முன்னிலையானார். இரண்டு முறைப்பாடுகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குனவெவே தம்மரதன தேரர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## போராட்டத்தைத் தொடரும் தபால் தொழிற்சங்கம்

கொழும்பு, ஓக.19

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியால் ஆரம்பிக்கப்பட்ட பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 19 கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுமுன்தினம் மாலை 4 மணி முதல் ணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மத்திய தபால் பரிமாற்றத்தில் தொடங்கிய இந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்று நள்ளிரவு 12 மணி முதல் நாடு தழுவிய அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது. (எ-இ)

நாளை
புதன்கிழமை - ஆவணி 04
20.08.2025
சுபநேரம் : 04.35 - 06.05
ராகுகாலம் : 12.05 - 01.35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவை**


யாழ் முதியோர் காப்பகத்திற்கு
ஆண்/ பெண்
வேலையாட்கள் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
**077 712 6860, 077 712 6859**
(CR/45865) J-1

# குளத்தில் மூழ்கி ஒருவர் மரணம்

செவனகல பகுதியில் ஹபுருகலை போதி ராஜா குளத்தில் மூழ்கி 42 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். இவர் மற்றொரு நபருடன் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது ஒரு குழியில் விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சடலம் எம்பிலிப்பிட்டிய மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக செவனகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 09 . 1984



இறப்பு 18 . 08 . 2025

### அமரர் பாலபரணம் நிருபன்
(SBN Photocopy உரிமையாளர்)

கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலாபரணம் நிருபன் (18.08.2025) நேற்று திங்கட்கிழமை காலமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலாபரணம் மற்றும் சுகுணசரஸ்வதிதேவி ஆகியோரின் பாசமிகு மகனும், நித்தியாவின் அன்பு சகோதரனும் (தம்பி), ரகுராஜின் மைத்துனரும், பிரவீனயா, பவனுஜா, ஹரீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று செவ்வாய்க்கிழமை (19.08.2025) 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**25, புகையிரத நிலையவீதி
கொக்குவில்**

**தகவல்: குடும்பத்தினர்
076 431 6362, 021 222 3485**

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை புத்தூர்
## மீள்சுழற்சிக்குரிய திண்மக் கழிவுப்பொருட்களின் ஏலவிற்பனை

எமது சபையின் நீர்வேலியில் அமைந்துள்ள எமது திண்மக்கழிவு மீள்சுழற்சி நிலையத்தில் மீள்சுழற்சிக்குரிய கீழ்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது.

**காலம் :- 27.08.2025 செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணி**
**இடம் :- திண்மக்கழிவு மீள்சுழற்சி நிலையம், நீர்வேலி.**

01.தண்ணீர்இ சோடாபோத்தல் (நசுக்கப்பட்டது)
02.பொலித்தீன் கலவை
03.உரப்பைகள்
04.ரயர்கள்
05.பிளாஸ்ரிக் பொருட்கள்
06.விறகு
07.முள்ளுக்கம்பி
08.குடைக்கம்பி
09.நெற்வகை
10. தார் பரல்
11.தகரப்பேணி
12. தகரம்
13. பழைய இரும்பு
14. கண்ணாடி – கலர்இ வெள்ளை (உடைந்தது)
15. காட்போட்
16. சேதனப்பசளை
17. ஏனைய பொருட்கள்

**நிபந்தனைகள்**

01. ஏலவிற்பனைதாரர் ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் சமூகமளித்தல் வேண்டும்.

02.ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 5000.00 இனையும் மீளளிக்க முடியாத படிவக்கட்டணமாக ரூபா100.00 இனையும் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய கட்டணங்கள் செலுத்தாதோர் ஏல விற்பனையில் பங்குபற்ற முடியாது.

03.அலுவலக வேலை நாட்களில் பொருட்களை காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை நீர்வேலியில் அமைந்துள்ள திண்மக்கழிவு மீள்சுழற்சி நிலையத்தில். பார்வையிடலாம்.


04.மேலதிக விபரங்களுக்கு வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் நீர்வேலி உப அலுவலகத்தில் கடமை நேரங்களில் நேரடியாகவோ அல்லது 0212058973 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முடியும்.

**தவிசாளர்
வலிகிழக்கு பிரதேசசபை.
புத்தூர்.**

(CR/45864) J-1 2025.08.19

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 08 . 1960



மறைவு 17 . 08 . 2025

### வேலும்மயிலும் சுரேந்திரராசா

யாழ் பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலும்மயிலும் சுரேந்திரராசா அவர்கள் கடந்த (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலும்மயிலும் - தெய்வரத்தினம் தம்பதியரின் அன்பு புதல்வனும், பத்மாவதி அவர்களின் அன்பு கணவரும், அபிராமி (வைத்தியர்), கிருஷாந் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், திவாகர், மயூரிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஷயன், ஆருஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற உருக்குமணிதேவி, திரு. மகேந்திரராஜா, திருமதி. தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2025) புதன்கிழமை மதியம் 01.00 மணியளவில் அன்னாரின் ஆத்தியடி, பருத்தித்துறை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மாலை 04.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:
குடும்பத்தினர்.**




Sponsors
MANGO MANSION
Saravana ADVERTISING & DIGITAL PRINTING
உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒக்கம்பிட்டிய பொறுப்பதிகாரியின் பிணை மனுவை நிராகரித்த மன்று!

கொழும்பு, ஓக.19

மணல் வர்த்தகர் ஒருவரிடமிருந்து 40 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட ஒக்கம்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க சந்தேகநபரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, தனது கட்சிக்காரரின் மகள் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றார் என்றும், அதை ஒரு சிறப்பு விடயமாகக் கருதி சந்தேகநபருக்குப் பிணை அனுமதி வழங்கவேண்டும் என்றும் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

சந்தேகநபருக்கு எதிரான விசாரணைகள் இன்னும் நடைபெற்றுவருவதால், பிணை வழங்குவதற்கு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இரு தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட வாதங்களைப் பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான், சந்தேகநபரின் பிணை மனுவை நிராகரித்து, அவரை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை மேலும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (எ-இ)



கடந்த மே மாதம் மின்னல் தாக்கி உயிரிழந்த ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பின் உறுப்பினர் குணரத்தினம் குமரனின் நினைவாக ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பினர் மற்றும் கலாநிதி சனசமூக நிலைய நிர்வாகம் ஆகியன இணைந்து நடத்திய குருதிக்கொடை நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஏழாலைச் சந்தியில் அமைந்துள்ள ஏழாலை வடக்கு-கிழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. குருதிக்கொடை வழங்கிய அனைவருக்கும் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (எ-41-66)

# மாகாணத் தேர்தல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும் அநுர

## பொதுஜன பெரமுன வலியுறுத்து

மாகாணசபைத் தேர்தல் தொடர்பான தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உடனடியாக நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி வலியுறுத்தியுள்ளது. மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட கட்சி செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்ததாவது-

மாகாணசபைத் தேர்தல் பல வருடங்களாக நடத்தப்படாமல் உள்ளது. தேர்தலுக்கு அஞ்சியே ரணில் விக்கிரமசிங்க மாகாணசபை [illegible] மலாக்கும்வகையில் சட்டத்திருத்தம் மேற்கொண்டார். இதற்கு ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளித்தனர். பாதீட்டில் மாகாணசபைகளுக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகின்றது. எனவே, மக்களுக்கு சேவையாற்ற மக் [illegible] அவசியம். எனினும், நிதி அதிகாரத்தை ஆளுநர்கள் ஊடாக ஜனாதிபதி தம்வசம் வைத்துள்ளார். இது ஏற்றுக்கொள்ளமுடியாத விடயமாகும். மாகாணசபைத்தேர்தல் தொடர்பில் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள்மூலம் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி சுமுக உறவு ஏற்படக்கூடும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** பயணங்களைத் தவிர்ப்பது அவசியம். வீட்டில் பணிச்சுமை அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறு சிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சிதரும் நாள். புதிய முயற்சிகளைக் காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**சிம்மம்:** உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். அதிகாரிகளால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது. சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், அவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொடுப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர்செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம்.

**மீனம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும்.

### இலங்கையில் கைதுசெய்யப்பட்ட

# மீனவரை விடுவிக்கக்கோரி ரயில் மறியல் போராட்டம்

## இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவிப்பு

சென்னை, ஓக.19

**இலங்கையில் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரி தமிழகம், இராமேஸ்வரத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்கள், இன்று ரயில் மறியல் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.**

இலங்கையில் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழகக் கடற்றொழிலாளர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் ஆரம்பிக்கப்பட்ட காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டம், நேற்று எட்டாவது நாளாகவும் தொடர்ந்தது. இந்தநிலையில், கடற்றொழிலாளர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்தின் ஒரு கட்டமாக, இன்று இராமேஸ்வரத்தில் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும் என்று தமிழக விசைப்படகு உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜேசு தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களில் இந்திய மீனவர்கள் 64 பேர் இலங்கைக் கடற்படையினரால் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 24 மீனவர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஏனையோர் நிபந்தனைகளின் அடிப்படையில், நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர். (எ-இ)

# இரு கார்கள் மோதி விபத்து; ஒருவர் மருத்துவமனையில்



முல்லைத்தீவு, ஓக.19

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில், உடையார்கட்டுப் பகுதியில் இரு கார்கள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. நேற்றுக்காலை நடந்த இந்த விபத்துச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். புதுக்குடியிருப்பிலிருந்து பயணித்த கார் ஒன்று உடையார்கட்டுப் பகுதியில் வீதியில் திருப்ப முற்பட்ட மற்றொரு காருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. காரில் பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் மூங்கிலாறு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்தில் சிக்கியுள்ள இரு கார்களும் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. இந்தச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-இ)

# நல்லூரில் வன்முறை; ஐவருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஓக.19

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஆலயப் பகுதியில் வன்முறையில் ஈடுபட்ட ஐவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஐவர் அடங்கிய குழுவொன்று அங்கிருந்த நால்வர்மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் காயமடைந்த நால்வரில் இருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

தாக்குதல் நடத்திய ஐவரும் அங்கு கடமையில் இருந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (எ-25,27)

### "சலஞ்சேஸ் ரைற்ரன்ஸ்" மென்பந்து சுற்றுப்போட்டி

# கிண்ணத்தைக்கைப்பற்றியது வேலணை சலஞ்சேஸ் அணி!

யாழ்ப்பாணம், ஓக.19

தீவகத்தின் முதன்மைச் சுற்றுப்போட்டியான "சலஞ்சேஸ் ரைற்ரன்ஸ்" வெற்றிக்கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெற் சுற்றுத்தொடரில் வேலணை சலஞ்சேஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

தீவகத்தை உள்ளடக்கிய வகையில் வேலணை சலஞ்சேஸ் மற்றும் ரைற்ரன்ஸ் கழகங்கள் இணைந்து வருடந்தோறும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட சுற்றுத்தொடரை நடத்துகின்றன. இந்த ஆண்டுக்கான தொடர் 24 அணிகளின் பங்கேற்புடன் வேலணை உப்புக்குழி மைதானத்தில் கடந்த 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதிவரை நடைபெற்றது.

இறுதி ஆட்டத்தில் வேலணை சலஞ்சேஸ் அணியும், அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பிலிப்ஸ் அணி 9 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வேலணை சலஞ்சேஸ் அணி 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்து சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (எ-25, 27)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

14 மாணவர்கள் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த பாடசாலையில் தரம் 7, 8, 9 மற்றும் 10 ஆகியவற்றில் 17 மாணவ வெற்றிடங்கள் காணப்பட்டுள்ளன. இவற்றை நிரப்புவதற்காக சுற்றுநிருபத்தின் அடிப்படையில் முறையான விளம்பரப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு, விண்ணப்பம் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டு, நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு மாண வர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

எனினும், அவர்களில் 3 மாணவர்கள் மட்டுமே தற்போது சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனைய 14 மாணவர்களையும் தவணையின் ஆரம்பமாக நேற்றையதினம் அந்தப் பாடசாலையில் வந்து இணையுமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, அந்த மாணவர்கள் இதற்கு முன்னர் கல்விகற்ற பாடசாலைகளில் இருந்து விடுகைப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு புதிய பாடசாலைக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது அவர்களுக்கு அதிர்ச்சியே காத்திருந்தது. குறித்த 14 மாணவர்களையும் பாடசாலையில் இணைக்கும் திட்டம் ஆளுநரின் விசேட உத்தரவுக்கு அமைய நிறுத்தப்பட்டுள்ளது என அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் திகைப்படைந்த மாணவர்களும் பெற்றோரும் ஆளுநரிடம் தமக்கு நிகழ்ந்த அநீதியை முறையிட்டுள்ளனர். அத்துடன், இந்த விடயம் தொடர்பில் உடனடியாகத் தலையிட்டுத் தீர்வொன்றைத் தருமாறு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடமும், எம்.பி.க்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக அவர்கள் உதயனுக்கும் நேற்று வருகைதந்து, தமது முறைப்பாட்டைக் கையளித்துள்ளனர்.

மாணவர்கள் ஒரு பாடசாலையிலிருந்து விடுகைப்பத்திரம் பெற்றுக்கொண்டு மற்றைய பாடசாலைக்குச் செல்லும்போது, அங்கு அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையும், மிகவும் முக்கியத்துவம் மிக்க இந்த விடயத்தில் முறையான தொடர்பாடல்கள் பேணப்படாதமையும் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன என கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-ம)

## கடையடைப்புக்கான...

அறிக்கையில் உள்ளதாவது:-

தனிநபர் அழைப்பாக விடுக்கப்பட்ட கதவடைப்பு நியாயமற்றது என்று நாங்கள் முதலில் தெரிவித்திருந்தோம்.

அதாவது இராணுவ கூட்டாளிகளில் சிலர் போதையுடன் முகாமுக்குச் சென்றதும் இராணுவம் கள் வாங்கக் கொடுத்த காசை கேட்டு தாக்கியபோது ஒருவர் போதையுடன் ஓடிச்சென்று குளத்தில் மூழ்கி இறந்ததும், ஏனையவர்கள் சிதறியோடியதும் சட்டம் ஒழுங்கு சம்பந்தமான பிரச்சினை. சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, இந்த விடயத்துக்கு கதவடைப்பு தேவையற்றது என்பது எமது நிலைப்பாடு. பெரும்பாலான தரப்புகள் சிவசேனையினுடைய கருத்துகளுக்கு வலுவூட்டும் வகையில் கதவடைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையை எண்ணி மகிழ்ச்சியடைகின்றோம். தமிழ்த் தேசியத்தை அழித்து தமிழ் மக்களின் தலையில் மண்ணள்ளிப் போட நினைக்கும் தமிழ்த் தேசிய விரோதி களுக்கு, தமிழ் மக்கள் நல்ல தொரு பாடத்தை கதவடைப்புப் புறக்கணிப்பின் மூலம் கூறியுள்ளனர். முதலமைச்சர் கனவுடன் உலாவரும் சட்டாம்பியாரின் வாக்கு வங்கியில் இந்தப் புறக்கணிப்பு தாக்கத்தைச் செலுத்தும் என்பதில் ஐயமில்லை. தமிழ் மக்களை பகடைக்காய்களாக்க நினைப்பவர்களுக்கும் தமிழ்த் தேசியத் துரோகிகளுக்கும் இந்த கதவடைப்பு புறக்கணிப்பு நல்லதோர் பாடமாக அமையட்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக மடு திருவிழாவுக்காக 15ஆம் திகதி கதவடைப்பு போராட்டத்தை 18ஆம் திகதிக்கு மாற்றியவர்கள் நல்லைக் கந்தப் பெருமானின் திருவிழாவை பற்றி எள்ளளவும் சிந்திக்கவில்லை. கந்தனின் திருவருளாலேயே இவர்களது போராட்டம் பிசுபிசுத்தி நிற்கின்றது என்று கூறலாம். அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பதை போலித் தமிழ்த் தேசியவாதிகள் உணர்வது அவசியம் - என்றுள்ளது. (அ-ம-20-66)

## கடைகளைப்...

மேலும் தெரிவித்ததாவது:-

ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தால், அதைக் கடைப்பிடிப்பதும் விடுவதும் வர்த்தகர்களின் உரிமை. தங்களின் முடிவைவரும் வர்த்தகர்கள் மீது திணிக்க முற்படக்கூடாது. வவுனியாவில் வர்த்தகர்களின் விருப்பத்துக்கு ஏற்ப ஹர்த்தாலைப் புறக்கணித்து தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறிருக்கையில் சுமந்திரன் சில ஆட்களுடன் வந்து அச்சுறுத்துவது போன்ற உடல்மொழியைக் காண்பிக்கின்றார்.

தமிழர்களுக்காக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட நான் தயார். சுமந்திரன் தயாராக உள்ளாரா? தேவையற்ற அழுத்தங்களை வர்த்தகர்கள் மீது திணிக்கவேண்டாம். அதற்கு நாங்கள் அனுமதிக்கமாட்டோம். நாங்கள் வீதியில் செல்லும் நபர்கள் அல்லர். நாங்கள் வர்த்தகர்களின் பிரதிநிதிகள். எங்களை வர்த்தகர்கள்தான் தெரிவுசெய்துள்ளனர் - என்றார். (அ-ம-110)

## போதை...

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமையவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான இளைஞர் மானிப்பாய் சுதுமலையைச் சேர்ந்தவர். அவரிடம் ஏராளமான போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-26)

## திடீர்...

தில்லையன் முருகேசன் (வயது-75) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மூன்று நாள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த அவர், அளவெட்டி மருத்துவமனையில் சிகச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். நேற்று அவருக்குத் திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## வடக்கு...

புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஒரு சில பகுதிகளுக்கு அடுத்த சில நாள்களுக்கு மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்துடன், வடக்கு மாகாணத்தில் நேற்று நிலவிய குளிர்ச்சியான காலநிலை இன்றும் தொடரும் - என்றார். (அ-ம-66)

## கடலுக்குள்...

நிலையில், அவர் முன்னரேயே உயிரிழந்துவிட்டார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## யாழில்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவத்தினரை அகற்றுமாறு வலியுறுத்தியே தமிழரசுக் கட்சி ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. அதனை ஏற்று பெரும்பாலான இடங்களில் ஹர்த்தாலுக்கு ஆதரவு கிடைத்துள்ளது. யாழ்ப்பாணத்தில் குறிப்பாக யாழ். நகர்ப் பகுதியில் மாத்திரமே வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன. அவர்கள் ஆதரவு வழங்காதது மனவருத்தமே. அதற்காக வெட்கப்படுகின்றேன்.

ஹர்த்தால் தொடர்பான எமது அறிவிப்பு விடுக்கப்பட்டதும், ஜனாதிபதி மற்றும் அமைச்சர் பிமல் உள்ளிட்டவர்கள் எம்மைத் தொடர்புகொண்டு உரையாடியிருந்தனர். முத்துஐயன்கட்டு இராணுவ முகாமை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம் (இந்த முடிவு சில வாரங்களுக்கு முன்னரே எடுக்கப்பட்டு, தற்போது அகற்றும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன) எனக்கூறினார்கள். இதுவே வெற்றி.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். அவர்கள் மக்களுடன் மக்களாக இருக்கமுடியாது. தெற்கில் இராணுவ முகாம்கள் உள்ளன. அங்கு அவர்கள் இராணுவ முகாம்களுக்குள் முடங்கிக் காணப்படுவார்கள். ஆனால் வடக்கு - கிழக்கில் அந்த நிலைமை இல்லை. அவர்கள் மக்களோடு மக்களாக, மக்களின் இயல்பு வாழ்வில் தலையீடு செய்கின்றனர்.

பாடசாலைகள், தனியார் காணிகள், ஏன் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றுக்குச் சொந்தமான காணியைக் கூட கையகப்படுத்தி அதில் நிலைகொண்டுள்ளனர். இதை இனியும் ஏற்கமுடியாது.

பருத்தித்துறை நீதிமன்றுக்குச் சொந்தமான காணியில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றக்கோரி, பருத்தித்துறை நகரசபைத் தவிசாளரின் அழைப்பின் பேரில் விரைவில் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது. அவர் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர். எனினும், அந்தப் போராட்டத்தைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்கும். வடக்கு கிழக்கில் இராணுவ மயமாக்கலுக்கு எதிராகத் தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-ம-20)

## ஹர்த்தால்...

முத்துஐயன்கட்டு இராணுவ முகாமுக்குள் அழைக்கப்பட்டு தமிழ் இளைஞர்கள் சிலர் தாக்கப்பட்டனர் என அண்மையில் குற்றஞ்சாட்டப்பட்டது. இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் முத்துஐயன்கட்டு குளத்தில் இருந்து சடலமாகவும் மீட்கப்பட்டிருந்தார்.

இதையடுத்து, வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராகத் தமிழரசுக் கட்சியால் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. பின்னர், 'பகுதிநேரக் கடையடைப்பு' என போராட்டம் மாற்றப்பட்டு, அந்தப் போராட்டமே நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நகரப்பகுதி, சாவகச்சேரி நகரப்பகுதி, கிளிநொச்சி நகரப்பகுதி, வவுனியா நகரப்பகுதி மற்றும் பருத்தித்துறை நகரப்பகுதிகளில் பெரும்பாலான வர்த்தகர்கள் பகுதிநேரக் கடையடைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. சம்பவம் இடம்பெற்ற புதுக்குடியிருப்பிலும், முல்லைத்தீவிலும் கணிசமான வர்த்தகர்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள். கிழக்கிலும் பெரும்பாலான வர்த்தகர்கள் கடையடைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. அத்துடன், இரண்டாம் தவணை ஆரம்பநாளான நேற்று பாடசாலைகள் வழமைபோல் ஆரம்பமாகின. போக்குவரத்துச் சேவைகளும் இயல்பாகவே காணப்பட்டன.

தமிழர் தாயகத்தில் வழமையாக முன்னெடுக்கப்படும் கடையடைப்புப் போராட்டம் முழுமையாக வெற்றியளிப்பது வழக்கம். ஆனால், இம்முறை அவ்வாறான ஒத்துழைப்பை பொதுமக்களும் வர்த்தகர்களும் வழங்கவில்லை.

பரந்துபட்ட கலந்துரையாடல்களை மேற்கொள்ளாமல், தன்னிச்சையாக ஹர்த்தால் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன், ஹர்த்தாலின் ஏற்பாடுகள் தொடர்பில் பல்வேறு மாற்றங்கள் மாறிமாறி அடிக்கடி செய்யப்பட்டிருந்தன. இவையும் பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்காமைக்குக் காரணங்கள் என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ள னர். (அ-ம-56-66-60-20-100-110-18-28)

## எவரும்...

சிக்கல் தொடர்பில், எந்தவொரு தரப்பையும் பாதிக்காமல் நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

மாணவர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தெரிவுசெய்யப்பட்டு, பின்னர் சேர்க்கை நிறுத்தப்பட்டதால் 14 மாணவர்கள் பாதிக்கப்பட்ட விடயம் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இதையடுத்தே, இந்த விடயத்தில் எந்தவொரு மாணவரும் பாதிக்கப்படாமல் செயற்படுமாறும், கல்வி அமைச்சின் அதிகாரிகள், பெற்றோர், பாடசாலைச் சமூகத்தினர் மற்றும் முன்னாள் அதிபர்கள் ஆகியோரை உள்ளடக்கி பரந்துபட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டு தீர்வை எட்டுமாறும், கல்வி அமைச்சின் செயலருக்கு ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அரசியல்வாதிகளின் ஓய்வூதியம் நிறுத்தப்படக்கூடாது

## முன்னாள் அமைச்சர் துமிந்த தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதிகளோ, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களோ வேறு தொழில்கள் செய்வதில்லை. அவர்கள் அவர்களின் ஓய்வூதியப் பணத்தில்தான் வாழ்கிறார்கள். ஓய்வூதியத்தை நிறுத்துவது அநீதியானது என்று முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

30 வருட போரை முடித்து நிலையான சமாதானத்தை உருவாக்கிய மஹிந்த ராஜபக்சவின் உயிர் பாதுகாக்கப்படவேண்டும். அவருக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்படவேண்டும். புலிகள் மஹிந்தவைக் கொல்வதற்கு பல்வேறு வழிகளில் முயற்சி செய்தனர். தனது உயிரைபற்றிக் கவலைப்படாமல் இந்த நாட்டு மக்களின் உயிரைக் காப்பற்றுவதற்காக புலிகளுடன் போர் புரிந்தார். அரசியல்வாதிகள் தேவையில்லை என்றால் நாடாளுமன்றத்தை மூடிவிடுதல் நல்லது. ஜனாதிபதிப் பதவியையும் நீக்கிவிட்டு அதிகாரிகளிடம் இந்த நாட்டை நிர்வகிக்கக் கொடுக்கவேண்டியதுதானே. ஜே.வி.பி. அரசியல்வாதிகள் மக்களின் பணத்தில் இருந்துதானே வாழ்கிறார்கள். அந்தக் கட்சி அதிக நிதியைக் கொண்டுள்ளது. அந்த நிதி கிடைத்தது ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களின் நாடாளுமன்ற சம்பளத்தில் இருந்து. அப்படியென்றால் மக்களின் அதிகமான பணம் இந்தக் கட்சியிடம் இருக்கிறது. அது நியாயம் என்றால் மக்களின் பணத்தில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதில் என்ன பிழை இருக்கிறது-என்றார். (எ-25, 75)

# மூன்று மாதங்களுக்குள் வாகன இலக்கத் தகடுகள்



கொழும்பு, ஓக.19

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள வாகன இலக்கத் தகடுகளை வழங்குவதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்முதற்குழு முறையாக ஏலத்தை திறந்துள்ளது என்று மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தக் குழு முன்வைக்கப்பட்ட விலைமனுக்களை மதிப்பாய்வு செய்கின்றது என்றும், போக்குவரத்து அமைச்சு விரைவில் சிறந்த விநியோகஸ்தரை அங்கீகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாது-

இரண்டு முதல் மூன்று மாதங்களுக்குள் அதிகாரப்பூர்வமான சேதமாகாத இலக்கத் தகடுகளை வழங்குவதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் எதிர்பார்க்கிறது. தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்புத் தரநிலைகள், செலவுத் திறன், விநியோகத்திறன் மற்றும் விநியோகஸ்தர் நம்பகத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்-என்றார். (எ-இ)

# செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தத் திருவிழா

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

அடுத்தமாதம் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்குத் தேர்த்திருவிழாவும், 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ-25)

# காட்டு யானையுடன் மோதி வாகனம் விபத்து 6 பேர் காயம்

மாத்தறை மொனராகலை பிரதான வீதியில் தணமல்வில, கித்துல்கொடப் பிரதேசத்தில் காட்டு யானையுடன் மோதி வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. அதில் பயணித்த 6 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை 5 மணியளவில் நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். நிட்டம்புவையிலிருந்து மொனராகலை நோக்கிப் பயணித்த வாகனம் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.


விபத்தில் சிக்கிய காட்டு யானை அருகிலிருந்த காட்டுப் பகுதிக்குள் சென்றுள்ளது. விபத்துத் தொடர்பில் தணமல்விலப் பொலிஸார் மற்றும் தணமல்வில வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-இ)

# இந்தியா-அமெ. இடையான வர்த்தகப் பேச்சுகள் இரத்து?

புதுடில்லி, ஓக.19

இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையே இந்த மாதம் முன்னெடுக்கப் பட இருந்த வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரையான காலப்பகுதியில், இந்தியாவின் புதுடில்லிக்கு அமெரிக்கப் பிரதிநிதிகள் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

முன்மொழியப்பட்ட வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளைத் தாமதப்படுத்தல் மற்றும் இந்தியப் பொருள்களுக்கான மேலதிக வரிக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னதாக, அமெரிக்கா



வினால் நிவாரணம் வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்தப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

TENDER NOTICE

TENDERS FOR SALE OF WASTE MATERIALS

**Tender No: L/0192/2025 - Tender for sale of e-waste category items**

**Tender No: L/0193/2025 - Tender for sale of obsolete & unserviceable scrap items**

Tenders for the captioned subjects will be accepted by the undersigned, via SLT iSupplier portal, an online tendering system of SLT PLC, up to **14:00 hrs on 2nd September 2025.**

Tender documents could be obtained during office hours within 7 working days commencing **from 09:00 hrs. on 19th August 2025,** by e-mailing the receipt/s obtained after payment of the Non-Refundable Tender Fee of Rs 1,000.00 + VAT for **each tender** to any teleshop or cash counter of Sri Lanka Telecom PLC.

Bidding documents may be inspected free of charge at the place of issuing documents during normal working hours.

Those who intend to participate Tender L/0192/2025 should have a valid e-waste license obtained from Central Environmental Authority (CEA) Sri Lanka.

Tenderers should upload their proposal to SLT iSupplier portal on or before **14:00 hrs on 2nd September 2025.**

Tenders will be opened electronically through iSupplier portal and acceptance of the bids will be notified to the bidders via the portal itself.

Registered suppliers for the relevant subcategory can download the tender documents from https://www.slt.lk/iSupplier

For further details regarding Non-Refundable Tender Fee and collecting of tender documents, please call 011 309 0649 during office hours, or e-mail e_proc@slt.com.lk

GENERAL MANAGER
SUPPLY CHAIN MANAGEMENT
9TH FLOOR, SLT HQ - A BUILDING
SRI LANKA TELECOM PLC
LOTUS ROAD
COLOMBO 01

SLTMOBITEL

கல்லீரல் தேவை

**உடனடி - கல்லீரல் தானதாரர்கள் தேவை - உயிர் காக்கும் உதவி**

எங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு அவசரமாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை (Liver Transplant) தேவை.

உங்கள் தன்னார்வ தானம் அவருக்கு புதிய வாழ்க்கையைத் தரலாம்.

**தகுதிகள் :**
(சம்பந்தப்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

**வயது: 20 - 50 வயது.**
**எடை: 50 - 70 கிலோ.**
**இரத்த வகை: O (ஓ) மட்டுமே.**
**மதுபானம் உபயோகிப்பவர்கள் அல்லாதவர்கள் (no alcohol).**

முக்கியக் குறிப்பு:
தானதாரராகத் தேர்ந்தெடுக்கப்படுவது முழுமையான மருத்துவ, மனோதத்துவ மற்றும் ஆய்வு பரிசோதனைகளுக்குப்பிறகு மட்டுமே.

தானதாரர்கள் (Donors) 03 முதல் 06 வாரங்களில் முழுமையாக குணமடைவார்கள்.

**தொடர்புகளுக்கு:**
**தொலைபேசி: 0703011765**

உதவி தர விரும்புமா? தயவு செய்து உடனே தொடர்பு கொள்ளுங்கள் - உங்கள் ஒரே முடிவு ஒருவரின் வாழ்க்கையை மறு வழங்கும்.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org